# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை

முன்னிலை : திருமதி.என். மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.

2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை

விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 02 ஆம் நாள்

**அசல் வழக்கு எண்**: 04/2024

CNR No : TNCB150003452024

திரு. L.சுரேஷ் ( வயது 56 ),
த/பெ.லட்சுமணன்,
ஈட்டியார் டிவிசன், கல்லார் எஸ்டேட்,
வால்பாறை வட்டம் , கோவை மாவட்டம். ...... வாதி

/எதிர்/

செந்தில் (வயது 53),
ம/பெ. அமுதா ,
கல்லார் எஸ்டேட், சோலையார் அஞ்சல்,
வால்பாறை வட்டம் , கோவை மாவட்டம். ..... பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 11.03.2026-ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பால்பாண்டி,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.G.மீரா மொய்தீன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், வாதி தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பிற்கு போதிய வாய்ப்பு அளித்தும், பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முன்வரததால், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால், ஒருதரப்பாக்கப்பட்டு வாதி தரப்பு வாதத்தை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.15 17:11:42 +0530

16.03.2026 Dm Cum Jm
Valparai

## <u>தீர்ப்புரை</u>

1. வாதியிடம் பிரதிவாதி கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் பெற்ற கடன் அசல் ரூ.35,000/- த்தை தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 12% ஆண்டு வட்டியும், தீர்ப்பாணை தேதிக்கு பின்னிட்டு தொகை முழுவதும் வசூல் ஆகும் தேதி வரை 6% ஆண்டு வட்டியும் மற்றும் செலவு தொகையும் செலுத்த வேண்டுமென்று பரிகாரம் கோரி வாதி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

வாதியிடம் பிரதிவாதி கடந்த 10.05.2021-ம் தேதியன்று தொழில் காரணங்களுக்காகவும் மற்றும் தனது குடும்ப செலவினங்களுக்காக ரூ.35,000/- த்தை பிரதிவாதி கைமாற்றுக் கடனாக பெற்றுக் கொண்டு, அதனை ஆறு மாத கால அவகாசத்தில் வட்டியுடன் அசல் தொகைகளை வாதிக்கு திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதற்கு ஆதாரமாக வாதிக்கு ஒரு புரோ நோட்டீஸ் எழுதிக்கொடுத்து கையொப்பமிட்டுள்ளார். மேற்படி புரோ நோட்டினை சக்திவேல் என்பவரால் எழுதப்பட்டு சாட்சியுமாக கையொப்பமிட்டுள்ளார். வாதிக்கு பிரதிவாதி நாளது தேதிவரை யாதொரு தொகையும் செலுத்தவில்லை. தொகையை செலுத்தும்படி வாதி பலமுறை நேரில் போய் கேட்டும் பிரதிவாதி எந்தவித தொகையும் செலுத்த முன்வரவில்லை. தொகையை செலுத்தும்படி வாதி கடந்த 07.04.2022-ம் தேதியிட்ட வழக்கறிஞர் மூலம் பதிவுத்தபால் அறிவிப்பு அனுப்பப்பட்டு பிரதிவாதி 12.04.2022-ம் தேதியன்று பெற்றுக்கொண்டார். பிரதிவாதி இதுநாள் வரை அசல் மற்றும் வட்டித் தொகைகளை கொடுக்காமல் ஏமாற்றும் நோக்குடன் காலம் கடத்துவதால் அசல் தொகை ரூ.35,000/-மும், தாவா தொகை ரூ.42,933/-த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீப்பாணை தேதி வரை 12 % ஆண்டு வட்டியும், தீர்ப்பாணை தேதிக்கு பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 6% ஆண்டு வட்டியும் வாதிக்கு வழங்க கோரி வாதி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.15 17:11:49 +0530

16.03.2026

Dm Cum Jm
Valparai

**3. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்:-**

பிராதில் வாதியால் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிராதில் வாதியால் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதியே தகுந்த சாட்சிகள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு நிரூபிக்க வேண்டியது. இந்தப் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகள் அனைத்தையும் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதியால் தாவாவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானது, வாதி பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தைக் கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிடை ஆவணமான கடனுறுதிச் சீட்டுக்கு உண்டான எவ்வித கோட்பாடும் இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்று. கடனுறுதிச் சீட்டு பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்டதுமல்ல. தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையதல்ல. கடனுறுதிச் சீட்டு எழுதி கொடுத்து பணம் பெற வேண்டிய அவசியம். எக்காலத்திலும் பிரதிவாதிக்கு இல்லை. எவ்வித பிரதிபிரயோஜனமும் , வாதியிடமிருந்து பிரதிவாதி பெறவில்லை என்பதால், இந்த வாதிக்கு பிரதிவாதி பணம் செலுத்த எவ்வித கடப்பாடும் இல்லை.

3.1. மேற்படி, பிராதில் 1-வது பாராவில் கடைசி வரியில் கூறப்பட்டுள்ள ஒரு வீரப்பன் மகன் சக்திவேல் என்பவர் யாரென்றே பிரதிவாதிக்கு தெரியாது. மேலும், சாட்சியின் தகப்பனார் பெயர் மற்றும் விலாசம் ஆகிய யாதொரு விவரங்களும், கடனுறுதிச் சீட்டில் கிடையாது. கடனுறுதிச் சீட்டில் இல்லாத ஒரு சாட்சியை உருவாக்கவே மேற்கண்டவாறு பிராதில் சாட்சியின் தகப்பனார் பெயர், விலாசம் முதலியவை கூறப்பட்டு இவ்வழக்கிற்காக வேண்டி பொய்க் கட்டமைப்பை வாதி ஏற்படுத்தியுள்ளார். மேற்படி, எவ்வித கடப்பாடும் வாதி கோரியுள்ளபடி பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவரல்ல. மேற்படி, வாதி வழக்கில் கோரியுள்ளபடி யாதொரு தொகையும் மற்றும் அதற்குரிய முன், பின் வட்டியும் செலுத்த பிரதிவாதி

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.15 17:11:55 +0530

கடமைப்பட்டவரல்ல என்றும், வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல. பிராதில் கூறியுள்ளபடி கூறியுள்ள தேதி மற்றும் இடத்தில் யாதொரு நிகழ்வும் நடைபெறவில்லை என்பதால் இவ்வழக்கு மூலம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்றாகும். வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை பிரதிவாதிக்குரிய அதிகபட்ச செலவு தொகையுடன் (Exemplary Cost) தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை, இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து, கீழே கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. 10.05.2021-ம் தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு மறுபயனுடன் கூடியதா? மோசடியானதா?

2. தாவா கடன்தொகையை வாதி கோரியபடி பின்வட்டியுடன் பெற அருகதை உடையவரா?

3. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

5. **தீர்வு:-**

**எழுவினா 1, 2-ற்கான தீர்வு**

1. 10.05.2021-ம் தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு மறுபயனுடன் கூடியதா? மோசடியானதா?

2. தாவா கடன்தொகையை வாதி கோரியபடி பின்வட்டியுடன் பெற அருகதை உடையவரா?

இவ்வழக்கானது 10.05.2021-ம் தேதி பிரதிவாதி குடும்ப செலவினங்களுக்காக ரூ.35,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக தாவா பிராம்சரி நோட்டு

எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி தான் பெற்ற கடனை திருப்பிச்செலுத்தக்கோரி கடனை பிரதிவாதியிடமிருந்து கடனை வசூல் செய்து தரக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

6. வாதியின் வழக்கை நிரூபிக்க, வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1-ஆக விசாரித்து, 10.05.2021-ம் தேதியிட்டு பிராம்சரி நோட்டு அசல் வா.சா.ஆ.1-ஆக குறியீடு செய்து, வாதி தன் வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் வழக்கை நிரூபித்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் சக்திவேல் என்பவர் வா.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 தனது முதல் விசாரணையில், வா.சா.ஆ.1 ஆவணத்தை தான் எழுதியதாகவும், அதில் எழுதியதும் சாட்சியுமாக வா.சா.ஆ.2-ல் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கடந்த 10.05.2021-ம் தேதி உரிய பிரதிபிரயோஜனம் அடிப்படையில் பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.35,000/- த்தை கடனாக பெற்று அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 பிராம்சரி நோட்டு இயற்றி கொடுத்துள்ளார். வழக்கில் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதியதும், சாட்சியுமான சக்திவேல் என்பவரை வா.சா.2-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர்கள் தங்கள் சாட்சியத்தில் பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.35,000/-ம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை இயற்றி கொடுத்துள்ளார் என தெளிவாக சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், வாதி தனது வழக்கை உரிய ஆவணம் மற்றும் சாட்சிகள் மூலமாக நிரூபித்துள்ளார் என்றும், பிரதிவாதி தவறான விவரங்களை கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளதால் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என வாதிட்டார்.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.15 17:12:07 +0530

16.03.2026

Dm Cum Jm
Valparai

8. பிரதிவாதி தரப்பில், எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், பிரதிவாதி தரப்பில் சாட்சிகளை விசாரிக்க போதிய வாய்ப்பு அளித்தும், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளது.

9. இவ்வழக்கில் பிரதிவாதி வாதியிடமிருந்து, ரூ.35,000/-ம் கடந்த 10.05.2021-ம் தேதி கைமாற்றுக் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 பிராம்சரி நோட்டை எழுதிக்கொடுத்ததாக கூறுவது உண்மையா ? என்றும், தாவா கடனுறுதிச்சீட்டு மறுபயனுடன் கூடியதா? மோசடியானதா? தாவா கடன்தொகையை வாதி கோரியபடி பின்வட்டியுடன் பெற அருகதை உடையவரா? அல்லது பிரதிவாதி எதிர்வழக்குரையில் தாவா பிராம்சரி நோட்டை சக்திவேல் மற்றும் வாதி கூட்டாக சேர்ந்து போலியாக தயார் செய்யப்பட்டதா? என தெரிவித்திருப்பது உண்மையா? என பரிசீலிக்கும் போது,

10. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், தனிநபர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. வாசா.1 தனது சாட்சியத்தில், கடந்த 10.05.2021-ம் தேதி வாதியிடம், பிரதிவாதி ரூ.35,000/-ம் கைமாற்று கடனாகப் பெற்றுக்கொண்டு, மேற்சொன்ன தொகையினை ரூ.1/- வட்டியுடன் ஆறு மாத கால அவகாசத்தில் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதி வா.சா.ஆ.1-ஐ எழுதிக் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். வா.சா.ஆ.1-ஐ பரிசீலனை செய்கையில், 2021 வருடம் மே மாதம் 10 தேதி நான் அவசர நிமித்தம் குடும்பச் செலவுக்காகவும் இதர செலவினங்களுக்காக கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ.35,000/- என்றும் அதில் செந்தில் என்பவர் சுரேஷ் என்பவரிடமிருந்து பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.1-ல் P.செந்தில் என கையெழுத்திட்டு கொடுத்துள்ளது தெளிவாகிறது .

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.15 17:12:14 +0530

16.03.2026 Dm Cum Jm
Valparai

3. வாதி தரப்பு சாட்சியான வா.சா.2 தனது சாட்சியத்தில், வாதி, பிரதிவாதி மீது தாவா தொடர்ந்துள்ள சங்கதிகள் அனைத்தும், தனக்கு நன்கு தெரியும். வாதி, பிரதிவாதி குறித்தும் இருவருக்கும் இடையே தாவா தொகை பரிமாற்றம் குறித்தும் தனக்கு நன்கு தெரியும் என்றும், கடந்த 10.05.2021-ம் நாள் பிரதிவாதி வாதியிடம் ரூ.35,000/- கைமாற்று கடனாக பெற்றுக்கொண்டு, மேற்சொன்ன தொகையினை ரூ.1/- வட்டியுடன் ஆறு மாத கால அவகாசத்தில் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.1 புரோ நோட்டில் கையொப்பம் செய்து கொடுத்தார். அதில் தானும் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளது வா.சா.1-ன் சாட்சியத்தையும், வா.சா.ஆ.1-யும் உறுதிபடுத்தும் விதமாக உள்ளது. மேலும், வா.சா.ஆ.1-ஐ பரிசீலனை செய்கையில், எழுதியதும் சாட்சியுமான என்ற இடத்தில் சத்திவேல் என குறிப்பிடப்பட்டுள்ளது தெளிவாகிறது .

11 . மேலும், வா.சா.ஆ.2 மற்றும் 3- வரையிலான சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், வா.சா.1 தரப்பில் பிரதிவாதிக்கு 07.04.2022-ம் தேதியிட்ட வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதும், அதில் 10.05.2021-ம் தேதி ரூபாய் 35,000/-ம் கடனாகப் பெற்றுக்கொண்டு பலமுறை நேரில் கேட்டும், தாங்கள் அசலையோ, வட்டியையோ திருப்பி தரவில்லையென்றும் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி 12.04.2022-ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான Track Consignment வா.சா.ஆ.3-ன் மூலம் தெளிவாகிறது.

**As per the decision cited in A.Govindan (Died) Vs. K.S.Jayanthakumar -SA.No 338/2017 – Dated 10.01.2022- Hon'ble High Court of Madras** held that Again in K.P.O. Maideenkutty Hajee Vs. Pappu Manjooran and Anr. (1996) 8 SCC 586) this Court declared that when the suit is based on a pronote which is proved to have been executed, **Section** 118 (a) raises a presumption, until the contrary is proved, that

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.15 17:12:21 +0530

16.03.2026

Dm Cum Jm
Valparai

the promissory note was made for consideration. Initial presumption raised under the Section becomes unavailable when the plaintiff himself pleads in the plaint different consideration. If the plaintiff pleads that the promissory note is supported by a consideration as is recited in the instrument, the burden is on the defendant to disprove that the promissory note is not supported by consideration or different consideration, other than the one as cited in the promissory note did pass. If that consideration is not valid in law nor enforceable the court would consider whether the instrument is supported by by valid and legally enforceable consideration. The position of law was thus summarised; "It would thus be clear that when the suit is based on pronote, and promissory note is proved to have been executed , Section 118(a) raises the presumption, until the contrary is proved, that the promissory note was made for consideration. That initial presumption raised under Section118(a) becomes unavailable when the plaintiff himself pleads in the plaint considerations. If he pleads that the promissory note is supported by a consideration as recited in the negotiable instrument and the evidence adduced in support thereof, the burden is on the defendant to disprove that the promissory note is not supported by consideration or different consideration other than one recited in the promissory note did pass, if that consideration is not valid in law nor enforceable in law, the court would consider whether the suit pronote is supported by valid consideration or legally enforceable consideration. Take for instance, a pronote executed for a time barred debt. It is still a valid consideration. The falsity of the plea of the plea of the plaintiff also would be a factor to be considered by the Court. The burden of proof is of academic interest when the evidence was adduced by the parties. The court is required to examine the evidence and consider whether the suit as pleaded in the plaint has been established and the suit requires to be decreed or dismissed." அதாவது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு - 118(அ)-ன் படி மாறாக நிரூபிக்கப்படும் வரை, கடனுறுதிச் சீட்டு மறுபயனுக்காகவே எழுதி கொடுக்கப்பட்டதாக அனுமானம் கொள்ளவேண்டும். வாதி தரப்பில்

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.15 17:12:26 +0530

மறுபயனுக்காகவே கடனுறுதிச் சீட்டு எழுதி கொடுக்கப்பட்டதாக வாதம் முன் வைக்கப்பட்டால் அதை மறுத்து நிரூபிக்கவேண்டடிய சுமை பிரதிவாதிக்கு உள்ளதாக மேற்கண்ட முன் தீர்ப்பில் சொல்லியுள்ளது இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

12. இந்த வழக்கில், வா.சா.ஆ.1-ஐ பிரதிவாதி கடனாகப் பெற்ற ரூபாய் 35,000/-த்திற்கு எழுதி கொடுத்ததாக வா.சா.1-ம், அதை தான் தான் எழுதியதாகவும் பிரதிவாதி தன் முன்னிலையில் வா.சா.ஆ.1-ல் கையெழுத்திட்டு பணத்தை பெற்றுக்கொண்டதாக வா.சா.2 சொல்லியுள்ளதிலிருந்து வா.சா.ஆ.1-மறுபயனுக்காகவே எழுதி கொடுக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

13. இந்த நிலையில் மேற்கண்ட சங்கதியை மறுக்கும் விதமாகவும், பிரதிவாதி எதிர் வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, தாக்கல் செய்யாததால், தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். எனவே, வாதியின் தாவாவிற்கு பிரதிவாதி மறுப்பு செய்யவில்லை என்பதால் மேற்கண்ட சங்கதிகளை பிரதிவாதி தரப்பில் மறுக்கவில்லை என்பது தெளிவாகிறது.

14. எனவே, மேலே கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிக்குரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வா.சா.ஆ.1 ஆவணம் மறுபயனுடன் கூடியது என தீர்மானித்து, இவ்வழக்கின் எழுவினா 1-க்கு தீர்வு காணப்படுகிறது.

**15. எழுவினா-3**

தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன??

இவ்வழக்கானது வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்ட நிலையில், வாதிக்கு தாவா செலவு தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டும் என எழுவினா 3-ற்கு தீர்வு காணப்படுகிறது.

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.15 17:12:32 +0530

16.03.2026

Dm Cum Jm
Valparai

**16. இறுதியாக,**

1. வாதியின் தாவா வழக்கு அனுமதிக்கப்படுகிறது,

2. வாதிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.42,933/-மும், அசல் தொகை ரூ.35,000/-த்திற்கு தாவா தாக்கல் செய்த நாளான 15.02.2024 முதல் தீர்ப்பாணை தேதி வரை 12% ஆண்டு வட்டியும், அதன்பின் தொகை முழுவதும் செலுத்தும் வரை 6% ஆண்டு வட்டியும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. வாதிக்கு தாவா செலவு தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் தேதி திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.15 17:12:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:**

| | | |
|---|---|---|
| வா.சா.1 | - | சுரேஷ் |
| வா.சா.2 | - | செந்தில் |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | 10.05.2021-ம் தேதியிட்ட பிராம்சரி நோட்டு. |
| வா.சா.ஆ.2 | - | 07.04.2022-ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | - | 12.04.2022-ம் தேதி பிரதிவாதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான Track Consignment. |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.15 17:12:45 +0530

16.03.2026

Dm Cum Jm
Valparai

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**இல்லை.**

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.15 17:12:50 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**

**நீதித்துறை நடுவர், வால்பாறை.**

16.03.2026

Dm Cum Jm
Valparai